# வலுவான ஜனநாயகவாதி கலைஞர்!

“விஞ்ஞானம், பொது அறிவு, தன்மான உணர்ச்சி, ஒழுக்கம் இவை தரும் கல்வியே முக்கியம். இவை அளிப்பதாய் இல்லாவிடில் அக் கல்வியால் பயனில்லை” என்றார் தந்தை பெரியார்.

**“வறியோர்க்கெல்லாம் கல்வியின் வாடை**
**வரவிட வில்லைமத குருக்களின் மேடை**
**நறுக்கத் தொலைந்ததந்தப் பீடை**
**நாடெல்லாம் பாய்ந்தது கல்வி நீரோடை”**

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்.



இந்திய விடுதலையின் வெளிப்பாடு அனைவருக்கும் சமமாகவும், சீராகவும் கல்வி வாய்ப்பை உருவாக்கித் தருவதே என்பதை நன்கு உணர்ந்த அரசியல் ஆளுமை கலைஞர் என்றால் அது மிகையாகாது.

கலைஞர் காலத்தில் உருவான கல்விக் கூடங்கள், கட்டடங்கள் ஆகியவற்றை பட்டியல் போடுவது இந்தக் கட்டுரையின் நோக்கம் அல்ல.

தந்தை பெரியாரின் சுயமரியாதை கோட்பாட்டின் அடிப்படையில், சமத்துவச் சமூகம் மலர வேண்டும் என்றால் அதற்கு “சமச்சீர் கல்வி” அமைப்பு வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தார்.

குழந்தைகள் மனதில் ஏற்றத்தாழ்வுகளை விதைக்கும் வகையில் கல்வி அமைப்பு இருப்பதை அவர் விரும்பவில்லை.

குழந்தைகள் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும். அனைத்துக் குழந்தைகளுக்கும் சமமான கற்றல் வாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல காலகட்டங்களில் பல்வேறு திட்டங்களைத் தீட்டினார்.

பெண் குழந்தைகள் தொடக்கப்பள்ளியை முடித்து வெளியேறிவிடுகின்றனர். அதற்கு பல காரணங்கள். பெண் குழந்தைகளை தொடர்ந்து படிக்க வைக்க மிகவும் நேர்த்தியாக சமூகநலத் துறையின் கீழ் ஒரு திட்டத்தை அறிவித்தார். பெண் குழந்தைகள் எட்டாம் வகுப்பு வரை படித்து முடிந்திருந்தால் அவர்கள் திருமணத்தின் போது ரூபாய் ஐயாயிரம் அரசு தரும் என்பதே அந்த அறிவிப்பு .

கல்வித் துறைக்கும் இந்த அறிவிப்பிற்கும் எந்த தொடர்பும் இல்லை. இருந்தபோதும் அவரின் அறிவிப்பு, நடுநிலைப் பள்ளிகளில் நின்றுபோன பெண் குழந்தைகளை மீண்டும் பள்ளியில் கொண்டு வந்து சேர்த்தது. பெண் உயர் கல்வி பெற இது அடித்தளம் இட்டது. தொடர்ந்து இந்த திட்டம் விரிவடைந்து பட்டப் படிப்பு வரை பெண்கள் படிக்க உதவியது. பெண்கள் சுயமரியாதையுடனும், சுயசார்புடனும் வாழ்வதற்கு கலைஞரின் இத்திட்டம் பெரும் வாய்ப்பாக அமைந்தது.

எதை, எப்படி, எந்த வகையில் செய்தால் அது கிடைக்க வேண்டிய உரிய பலனை ஈட்டித் தரும் என்பதை நன்கு ஆராய்ந்து செயல்பட்ட அரசியல் வித்தகர் தான் கலைஞர்.

**“தேர்வும் கல்வியும் வெவ்வேறானது, ஆனால் கல்வியாளர்களில் சிலர் கல்வியின் தரத்தை உயர்த்துகிறோம் என்ற பெயரில், இதுவரை பல்கலைக் கழக வளாகத்திற்குள் கால் வைக்க முடியாமல் உள்ள பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் இனி என்றுமே உள்ளே நுழைய முடியாத அளவு தேர்வுகளை மிகவும் கடினமாக்கி விடுகின்றனர்” என்று 1927ஆம் ஆண்டு மும்பாய் மேலவையில் பல்கலைக்கழக மசோதாவின் மீது ஆற்றிய உரையில் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தெரிவித்த கருத்தின் ஆழத்தை உணர்ந்த கலைஞர், பள்ளிக் கல்வியை வலுவாக வழங்கினால் மாணவர்கள் எளிதாக கற்க முடியும். அதை விடுத்து ஏன் தேர்வு மேல் தேர்வு என்ற நிலையை உருவாக்கி மாணவர்களை வதைக்க வேண்டும் என்று சிந்திக்கத் தொடங்கினார்.**

அதனால் மேல்நிலைப் பள்ளிக் கல்வியை வலுப்பெறச் செய்தார். ஆர்வமிக்க, தகுதி பெற்ற மாணவர்கள் உயர்கல்வி கற்க இயல்பான சூழலை உருவாக்கிட முனைந்தார்.

அனைவரும் உயர்கல்வி பெறுவதற்கு நுழைவுத் தேர்வு தடைக்கல்லாக உள்ளதை உணர்ந்து, சுமார் இருபது வருடங்களாக நடைமுறையில் இருந்த நுழைவுத் தேர்வு ஏற்படுத்திய விளைவுகளை ஆராய்ந்து அறிக்கை தர மூத்த கல்வியாளர் தலைமையில் குழு அமைத்தார்.



## பு. பா. பிரின்ஸ் கஜேந்திர பாபு

பொதுச் செயலாளர்

பொதுப் பள்ளிக்கான மாநில மேடை

குழு தந்த அறிக்கையின் அடிப்படையில் நுழைவுத் தேர்வை ரத்து செய்ய சட்டம் இயற்றி, அதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதலும் பெற்றார். சென்னை உயர்நீதிமன்றத்தில் இச்சட்டத்தை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்றம் மிகத் தெளிவாக “நுழைவுத் தேர்வு எளிய மக்களுக்கு எதிரானது. பணக்காரர்கள் மட்டுமே பயன்பட உதவக் கூடியது எனவே நுழைவுத் தேர்வை ரத்து செய்து தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டம் செல்லும்” என்று தீர்ப்பு வழங்கியது.

அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றம் ‘சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் தலையிட வேண்டிய அவசியம் இல்லை’ என்று வழக்கைத் தள்ளுபடி செய்தது. அதன்மூலம், நுழைவுத் தேர்வு ரத்து செல்லும் என்ற உயர் நீதி மன்றத் தீர்ப்பு உறுதிசெய்யப்பட்டது.

சமமான கற்றல் வாய்ப்பை உறுதிப்படுத்திடும் முதல் படியாக பாடத் திட்டம் மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மறுசீரமைப்பு செய்யும் சமச்சீர் கல்விச் சட்டம் தமிழ்நாடு கல்வி வரலாற்றில் ஒரு மைல் கல். கல்வியையும் கலைஞரையும் பிரித்துப் பார்க்க இயலாது என்பதை இச்சட்டம் வரலாற்றில் பதிவு செய்து உள்ளது.

ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது மட்டும் அல்ல, எதிர்க்கட்சியாக இருந்த போதும் தமிழ்நாடு அரசை கல்வித் துறையில் வழிநடத்தினார்.

ஆசிரியர் தகுதித் தேர்வில் இட ஒதுக்கீடு பிரிவினரின் உரிமையான மதிப்பெண் தளர்வு விவகாரத்தில் அவர் முரசொலியில் எழுதிய கடிதம் அன்றைய அரசை சிந்திக்கச் செய்தது.

இட ஒதுக்கீடு பிரிவினருக்கு மதிப்பெண் தளர்வு தர இயலாது என்று உயர்நீதிமன்றத்தில் வாதித்திட்டு வெற்றி பெற்ற அன்றைய தமிழ்நாடு அரசு, ஐந்து சதவீத மதிப்பெண் தளர்வு வழங்க அறிவிப்பை வெளியிடச் செய்தது கலைஞரின் அறிக்கை.

2015 டிசம்பர் மாதத்தில் கென்யா தலைநகர் நைரோபியில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் பத்தாவது உச்சி மாநாட்டில் சேவையில் வர்த்தகத்திற்கான பொது ஒப்பந்த பேச்சு வார்த்தையில் இருந்து கல்வியை விலக்கி கொள்ள வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டார். கல்வி வழங்கல் சேவையாக உள்ளது. கல்வி வணிகமாக கருதப்பட்டால் கல்வியின் தன்மையே மாறிவிடும். ஒன்றிய அரசு அத்தகைய சூழலில் கல்வியைச் சிக்கவைக்கக் கூடாது என்று தெளிவுபட அறிக்கை வெளியிட்டார்.

2016ஆம் ஆண்டில் தேசியக் கல்விக் கொள்கைக்கான சில உள்ளீடுகள் என்ற ஆவணத்தை ஒன்றிய அரசு வெளியிட்ட போது, அதன் ஆபத்துக்களை விளக்கி, தமிழ்நாடு அரசு வரைவை எதிர்த்திட வேண்டியதின் அவசியத்தை தெளிவுபட கூறி இருந்தார்.

**ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும், ஆட்சிப் பொறுப்பில் இல்லாத போதும் சமூகப் பொறுப்பு என்றும் தனக்கு உள்ளதை உணர்ந்து பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் வழியில் அயராது உழைத்தார்.**

**கல்வி மட்டுமே ஜனநாயகத்தை வலுவுடன் இருக்கச் செய்யும். வலுவான ஜனநாயகம் தான் நமது சுதந்திரத்தை உறுதிசெய்யும். கலைஞர் இதை உணர்ந்து செயல்பட்டார்.**

இன்று, இந்திய நாட்டை சூழ்ந்துள்ள ஆபத்தை நாம் உணர்ந்து, தேசியக் கல்விக் கொள்கை 2020 என்ற பெயரில் வளாகமே இல்லாத படிப்பு முறையை திணித்து சமூகநீதியின் அடிப்படையில் வலுவாக கட்டி எழுப்பப்பட்ட கல்வி முறையை சிதைக்க அனுமதிக்க மாட்டோம் என்ற உறுதிமொழியை அனைவரும் ஏற்பதுதான் கலைஞர் நூற்றாண்டில் கலைஞருக்கு நாம் செலுத்தும் உரிய மரியாதை.



## குறட்பாக்களின் உலா!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்க்கை நெறி வகுத்துக் காட்டித் திருவள்ளுவரால் வகுக்கப் பெற்ற திருக்குறள் விளக்க நிகழ்ச்சிகளைக் காட்சியாக்கி நிழல் தரும் குளிர் தருக்கள் அடர்ந்த நீரோடைத் தமிழிலும், நெஞ்சில் கனலேற்றும் முழவோசைத் தமிழிலும், நீள் விழியில் நதி தோன்றத் தூண்டும் உருக்க மிகு உணர்ச்சித் தமிழிலும், குறட்பாக்களை உங்கள் முன்னால் உலவ விட்டிருக்கின்றேன்.

**- கலைஞர்**



## வாழ்க்கையின் ஓரம் !

வானத்தை முட்டும் மாளிகைகள்; மானத்தை இழந்த மனிதர்கள்; உயர்ந்த கோபுரங்கள், தாழ்ந்த உள்ளங்கள்!

தென்றலைத் தீண்டியதில்லை நான்; ஆனால் தீயைத் தாண்டியிருக்கிறேன்!

ஓடினாள், ஓடினாள்; வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்!

**-கலைஞர்.**

## இலட்சியப் பயணம்!



எந்த ஒரு நியாயமான இலட்சியமும் நிரந்தரமாக அழிந்து போவது கிடையாது. காட்டிக் கொடுப்பது, துரோகம் செய்வது இவை இன்று நேற்று தோன்றியவை அல்ல! எத்தனையோ நூற்றாண்டுகளாய், ஏன், புராண காலத்தில் இருந்தே புழக்கத்தில் இருப்பவை. துரோகிகளையும், காட்டிக் கொடுப்பவர்களையும் கண்டு தயக்கம் கொள்ளாமல்,நமது இலட்சியப் பயணத்தில் முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும்.

இன்று நாம் புரிகிற தியாகமும்,ஆற்றுகிற பணியும், எதிர் காலத்தில் வெற்றி பெற்று விடுமானால், அப்போது நாம் உயிரோடு வாழா விட்டாலும்,மக்களின் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருப்போம்.

**-கலைஞர்.**